# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **CC.No. 30/2018**

Prosecution witness : 3

| | | | |
|---|---|---|---|
| Name: | பாலமுருகன் | Caste: | |
| Father's Name: | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Accused present.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 10.10.2024**

**முதல் விசாரணை**:

நான் தற்போது பழனி உட்கோட்டம் ஆயக்குடி காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் உள்ளேன். கடந்த 12.09.2016 ம் தேதி அம்மையநாயக்கனுார் காவல்நிலையத்தில் பணியில் இருந்தபோது 10.15 மணிக்கு காவல்நிலையத்தின் சார்பு ஆய்வாளர்-சுமதி என்பவர் தொலைபேசி மூலமாக ரகசியதகவலாளி கொடுத்த தகவலின் அடிப்படையில் போதைப்பொருள் சம்பந்தமான ரோந்து செல்வதாக அனுமதி பெற்றும், எழுத்துப்பூர்வமான அனுமதி பெற்றும் சென்று இவ்வழக்கின் எதிரியை கைது செய்தும், 1 1/2 கிலோ கஞ்சா என்ற போதைப்பொருளை அத்தாட்சியில் கைப்பற்றியும், எதிரி மற்றும் சொத்துக்களுடன் 13.30 மணிக்கு அம்மையநாயக்கனுார் காவல்நிலையம் வந்து காவல்நிலைய குற்ற எண் 313/2016, பிரிவு 8(c) r/w 20(b) (ii)(B) NDPS வழக்கு பதிவு செய்தேன். இந்த வழக்கின் முதல் தகவல் அறிக்கையினையும் மற்றும் பிரிவு 57 ன்

படியான விரிவான அறிக்கையையும் நான் பெற்றுக்கொண்டு சம்பவ இடம் சென்று விசாரணை செய்தேன். சாட்சிகள் சார்பு ஆய்வாளர்,-திருமதி.சுமதி, தலைமைக்காவலர்-சுசீலா மற்றும் முதல்நிலைக்காவலர் -சதீஸ்குமாரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர்சம்பவம் உண்மை என தெரியவந்ததால் மேற்படி வழக்கின் எதிரியை அன்றை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் இந்த வழக்கில் கைப்பற்றப்பட்ட சொத்துக்களை நீதிமன்றம் மூலம் இரசாயன பகுப்பாய்வுக்கு அனுப்ப வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பி வைத்தேன். பின்னர் நான் மாறுதலில் சென்றுவிட்டபடியால் காவல் ஆய்வாளர்-சுரேஷ்குமார் அவர்களிடம் வழக்கின் கோப்புக்களை மேல்விசாரணைக்காக ஒப்படைத்தேன். பகுப்பாய்வு வேண்டுகோள் கடிதம், **அ.சா.ஆ.9** ஆகும்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் இந்த வழக்கின் ஆவணங்களை எந்த தேதியில் பெற்றுக்கொண்டேன் என்றால் 12.09.2016 அன்று 14.00 மணிக்கு பெற்றுக்கொண்டேன். என்னுடைய விசாரணை காலங்களில் நீதித்துறை நடுவர் முன்பு பிரிவு 52 ஏ(2)ன் படி மாதிரிகள் எடுப்பதற்கு முயற்சி செய்தேனா என்றால் இல்லை. 12.09.2016 ம் தேதி கைப்பற்றப்பட்ட சான்றுப்பொருட்கள் இந்த நீதிமன்றத்தில் 23.05.2017 அன்றுதான் ஒப்படைக்கப்பட்டது என்றால் சரிதான். இடைப்பட்ட காலங்களில் மேற்படி சான்றுப்பொருட்கள் யார் வசம் இருந்தது, எங்கு இருந்தது என்பதைக்காட்டக்கூடிய எந்த ஒரு ஆவணமும் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை எத்தனை மணிக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் 13.30 மணிக்கு பதிவு செய்யப்பட்டது. என்னுடைய விசாரணையில் 13.00 மணிக்கு பதிவு செய்ததாக சொல்லப்படும் அத்தாட்சியில் குற்ற எண் உள்ளதாகவும், 13.00 மணிக்கு முன்போ மற்றும் பின்போ பதிவு செய்யப்பட்ட ஆவணங்களில் குற்றஎண் காணப்

படாததற்கான காரணங்கள் குறித்து விசாரணையின் போது தெரியவந்ததா என்றால் தெரியவரவில்லை. நான் பகுப்பாய்வுக்காக கொடுத்த வேண்டுகோள் கடிதத்தில் மாதிரிமுத்திரை எதுவும் பதிக்கப்படவில்லை என்றால் சரிதான். சார்பு ஆய்வாளர் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையில் தனக்கு வந்த தகவலை எழுத்துமூலமாக பதிவு செய்ததாகவோ, அதனை எழுத்துமூலமாக தனது உயர் அதிகாரிக்கு அனுப்பியதாகவோ, முதல் தகவல் அறிக்கையில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். நான் சொன்னதுபோல், என்னுடைய சார்பு ஆய்வாளர் அவர்களுக்கு எவ்வித தகவலும் வரவில்லை என்றாலும் அதன் பேரில் எந்தவிதமான ரோந்து நடவடிக்கையும் செல்லவில்லை என்றாலும் எந்தவிதமான கஞ்சாவும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் , சொன்ன தேதி , நேரத்தில் எதிரியை கைது செய்யவில்லை என்றாலும், நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள அனைத்து ஆவணங்களும் காவல்நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்துவிட்டு அதற்கு ஆதரவாக இந்நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும், வழக்கு சொத்திற்கும், எதிரிக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.